கூட்டுறவு
(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை)

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2016–2017

**மானியக் கோரிக்கை எண். 12**


**செல்லூர் கே. ராஜூ**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**



தமிழ்நாடு அரசு
2016


## பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1–4 |
| I. | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 5–46 |
| II. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 47–68 |
| III. | நுகர்வோர் கூட்டுறவுகள் | 69–77 |
| IV. | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | 78–85 |
| V. | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 86–91 |
| VI. | கூட்டுறவுத் தேர்தல் | 92–93 |
| VII. | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 94–95 |
| | நிறைவுரை | 96 |

## முகவுரை

**1.** வேளாண்மை மற்றும் அதனுடன் இணைந்த செயல்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகும். கூட்டுறவு அமைப்புகள் உறுப்பினர்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு, அவர்களின் குறைவான மூலதனத்தைக் கொண்டு, கடன், இடுபொருள் விநியோகம் மற்றும் வேளாண்விளைப் பொருட்கள் விற்பனை ஆகியவற்றுடன் தொடர்புடைய பொது பிரச்சினைகளைத் தீர்க்க உதவியது. தமிழ்நாடு, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. திருவள்ளூர் மாவட்டம், **திரூரில் 1904–**ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல் கூட்டுறவுச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதே ஆண்டில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கியும் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது, தமிழ்நாட்டில் **24,082** கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சேவைகள் தேவைப்படும் மக்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு சேவை செய்வதே கூட்டுறவுகளின் தலையாய நோக்கமாகும்.

**2.** கூட்டுறவுகள் வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கிய பங்காற்றுவதோடு, உரிய காலத்தில் பயிர்க்கடன் வழங்கி, பயிர்க்கடனை உரிய காலத்தில் திருப்பிச்

செலுத்துவோருக்கு வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கி, வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்கள் வழங்கி, வேளாண் விளை பொருட்களைச் சேமிக்க கிராமப்புறங்களில் கிடங்கு வசதிகளை அளித்து, உரிய காலத்தில் உரம், விதை மற்றும் வேளாண் கருவிகளை வழங்கி விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைவதற்காக, மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற பங்கு மூலதன உதவியும் அளிக்கப்படுகின்றது. மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய காலத்தில் திரும்ப செலுத்துபவர்களுக்கு வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்படுகின்றன. பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக, வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் மற்றும் தொழில் முனைவோருக்கும், பணி புரியும் மகளிர்க்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகைக்கடன், சிறுவியாபாரிகளுக்கு சிறுவணிகக்கடன், வீட்டுவசதி மற்றும் வீடு அடமானக்கடன், சிறு போக்குவரத்து வாகனக் கடன் ஆகியவற்றை வழங்கி வருகின்றன.

**3.** மாநிலத்தில் **32,546** பொது விநியோகத் திட்ட அங்காடிகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தி வருகின்றன.

**4.** மலைவாழ் மக்களின் நலனுக்காக, அவர்களின் உற்பத்திப் பொருட்களான தேன், சாமை, வரகு மற்றும் புளி போன்றவற்றை விற்பனை செய்ய உதவி செய்து, மலைவாழ் மக்களுக்கு நல்ல விலை கிடைத்திட, கூட்டுறவுகள் துணைபுரிகின்றன. இவற்றைப் பொதுவான வணிக பெயரில் சிப்பமிட்டு, சந்தையிடவும், மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவியும் செய்யப்படுகிறது.

**5.** விலைக் கட்டுப்படுத்தும் நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் சந்தைக் குறுக்கீட்டு நடவடிக்கைகள் மூலம் விவசாயிகள் மற்றும் நுகர்வோர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. வெளிச்சந்தை விலையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, கூட்டுறவு நிறுவனங்கள் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளை நடத்தி, வெளிச்சந்தை விலையை விட குறைவாக, நியாயமான விலையில் காய்கறிகள் விற்பனை செய்து வருகின்றன. காய்கறிகளின் விலையைக் கட்டுப்படுத்திட, பசுமையான காய்கறிகளை விவசாயிகளிடமிருந்து உடனடியாக பணம் கொடுத்து நேரடியாக கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு

நியாயமான விலையில் இக்கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**6.** தரமான மருந்துகளைத் தள்ளுபடி விலையில் கூட்டுறவுகள் நடத்தும் **"அம்மா மருந்தகங்கள்"** மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்வது, பொதுமக்களின் நலனுக்காக கூட்டுறவுகள் செய்து வரும் சேவைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்.

**7.** கூட்டுறவுச் சங்கங்களில் மக்களாட்சி செயல்பாட்டினை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டு, **14** ஆண்டுகளுக்குப் பிறகு **2013** ஆம் ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

**8.** தமிழ்நாடு அரசு **31.03.2016** அன்று நிலுவையிலிருந்த, சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற குறுகிய கால பயிர்க்கடன்கள், மத்தியகால (வேளாண்மை) கடன்கள், நீண்டகால (பண்ணை சார்ந்த) கடன்கள் **ரூ.5780.92** கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் **16,94,145** சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

## இயல் – I

# கூட்டுறவுக் கடன் அமைப்பு

### 1. முன்னுரை

**1.1.** கடன் வழங்குவதில் கூட்டுறவுக் கடன்அமைப்பு தன்னிகரற்ற பழமை வாய்ந்த தனிப்பெரும் அமைப்பாக, அடிப்படைக்கட்டமைப்புகளுடன் மாநிலம் முழுவதும் பரவி விரிந்துள்ளது. மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற மக்களுக்கு நியாயமான வட்டி விகிதங்களில் கடன் வழங்கி வருவதால், அவர்கள் தனியாரிடம் மிக அதிகமான வட்டி விகிதத்திற்குக் கடன் பெற்றுச் சுரண்டலுக்கு ஆளாகாமல் நிதி இடர்ப்பாடுகளிலிருந்து மீட்க உதவுகிறது. இக்கூட்டுறவு அமைப்புகள், பரந்த அளவிலும் மற்றும் அண்மையிலும் அமைந்துள்ளதால், மக்கள் எளிதில் அணுகிக் கடன் பெறும் அமைப்புகளாக திகழ்கின்றன.

**1.2.** தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் என நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**1.3. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு** கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. **நீண்டகாலக் கடன் அமைப்பு** வட்ட/வட்டார அளவில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. குறுகிய காலக் கடன் அமைப்பு மற்றும் நீண்டகாலக் கடன் அமைப்பு கிராமப் புறங்களிலுள்ள விவசாயிகள் மற்றும் பிறரின் குறுகிய மற்றும் நீண்டகால கடன் தேவைகளை நிறைவு செய்வதை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வருகின்றன. நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் நகரக்கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கிய **நகரக்கூட்டுறவு கடன் அமைப்பானது** நகரம் மற்றும் புற நகர் பகுதிகளில் உள்ள நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்கின்றது.

பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், மத்திய, மாநில அரசு பணியாளர்கள் அரசு சார்ந்த பொது நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் தனியார்

நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

தமிழ்நாட்டில் குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பானது மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் **23** மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் **4480** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டதாக உள்ளது.

### 2.1. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது, **1905** ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாக செயல்படுகிறது. இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி, மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி குறுகிய காலக் கடன் அமைப்பின் மையமாக உள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கடன்

தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. இவ்வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியைக் கையாள்வதுடன், நிதிமேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் அளிக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் சவாலான பணியும் இத்தலைமை வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணியினைச் செயல்படுத்திட ஏதுவாக, இவ்வங்கி வேளாண் கடன் பணியாளர் கூட்டுறவுப் பயிற்சி மையத்தினை நடத்தி வருகிறது. மேலும், சென்னையிலுள்ள **47** கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு வங்கிச் சேவையாற்றி வருகிறது.

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான அமைப்பாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த **5** ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:–

**(ரூ.கோடியில்)**

| விவரம் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 106.70 | 191.91 | 269.33 | 282.44 | 287.30 |
| மாநில அரசின் பங்கு | 0.26 | 0.26 | 20.26 | 20.26 | 20.26 |
| ஒதுக்கீடு மற்றும் உபரி | 644.90 | 651.47 | 797.66 | 827.21 | 855.63 |
| வைப்புகள் | 6,525.82 | 7,788.13 | 9,617.40 | 7,767.79 | 8927.93 |
| பெறப்பட்ட கடன்கள் | 2,327.91 | 3,139.54 | 2,652.93 | 3,309.24 | 3037.81 |
| நிகர இலாபம் | 41.51 | 43.24 | 32.21 | 41.38 | 74.12 (உத்தேசம்) |

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவையினை (Core Banking Solution) நடைமுறைப்படுத்தியுள்ளது. நவீன வங்கியியல் வசதியான தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களை (Automated Teller Machine) சென்னையில் **6** இடங்களில் நிறுவியுள்ளது. இந்தியாவில் எந்த இடத்திற்கும் நிகழ் நேர மொத்தத் தீர்வு (Real Time Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (National Electronic Funds

Transfer) மூலம் உடனுக்குடன் மின்னணு பணப்பரிமாற்றம் செய்திடும் வசதிகளையும் இவ்வங்கி பெற்றுள்ளது.

இத்தலைமை வங்கி பராமரிக்கும் பல்வேறு நிதிகளில் "**தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதி**" மற்றும் "**வைப்புத் தொகை உத்தரவாத நிதி**" ஆகியன முக்கியமான நிதிகளாகும். தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது கூட்டுறவு உள் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. வைப்புத் தொகை உத்தரவாத நிதியானது பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு நிதிகளைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொதுமக்களுக்குத் திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. வைப்புத் தொகை உத்தரவாத நிதி பொதுமக்களிடையே கூட்டுறவு நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை மீட்பதிலும் நம்பகத்தன்மையை உயர்த்துவதிலும் துணை புரிகிறது. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதிக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதியளித்து வருகின்றன. வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நிதியளித்து வருகின்றன. **31.03.2016** தேதியில் தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில்

**ரூ.20.94** கோடியும், வைப்புத் தொகை உத்தரவாத நிதியில் **ரூ.145.84** கோடியும் உள்ளது.

## 2.2. மத்திய கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் **23** மத்திய கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுகள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற இணைப்புச் சங்கங்களுக்கு கடன் மற்றும் வங்கியியல் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள் பொது மக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதியாதாரங்களைப் பெறுகின்றன. மாநிலத்தில் செயல்பட்டு வரும் **23** மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி உரிமம் வழங்கியுள்ளது. இவ்வகையான சிறப்பைப் பெற்றதில் நாட்டின் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இவ்வங்கிகள் வட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படும் **813** கிளைகளைக் கொண்டுள்ளன. இதன் மூலமாக பொதுமக்களுக்கு வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன.

மத்திய கூட்டுறவு வங்கிகளின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாடுகளின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு:-

(ரூ.கோடியில்)

| விவரம் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 |
|---|---|---|---|---|---|
| உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 777.95 | 852.94 | 973.37 | 1,052.70 | 1248.49 |
| மாநில அரசின் பங்கு | 84.78 | 70.45 | 70.45 | 63.70 | 63.70 |
| ஒதுக்கீடு மற்றும் உபரி | 2,559.87 | 2,709.46 | 2,941.57 | 3,351.33 | 3537.67 |
| வைப்புகள் | 15,429.80 | 17,985.72 | 21,309.87 | 22,748.33 | 25,667.74 |
| பெறப்பட்ட கடன்கள் | 5406.28 | 7,170.90 | 5,750.20 | 5,609.60 | 5043.30 |

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவதிலும் கடன் வழங்குவதிலும் மெச்சத்தக்க முன்னேற்றம் அடைந்தது மட்டுமல்லாமல், இணைப்புச் சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகளின் கடன்களைச் சீரமைத்து வட்டிச் சுமையைக் குறைத்து இவற்றின் வணிக வளர்ச்சிக்கும், நிதி நிலை மேம்பாட்டிற்கும் உதவி புரிந்து வருகின்றன.

அனைத்து **23** மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் **2012–2013** ஆம் ஆண்டில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solution)

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் வங்கிகளின் கிளைகளுக்கிடையே மின்னணு பணப்பரிமாற்றம் நடைபெற ஏதுவாக்கப்பட்டதோடு நிகழ் நேர மொத்த தீர்வு (Real Time Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer) போன்ற பணப்பரிமாற்ற வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டது. இது, தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கியியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்திறனை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2015 – 16 ஆம் ஆண்டில் பணியாளர்களின் நலன்கருதி, கடன் மதிப்பீடு, நிதிமேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருள்களில் பணியாளர்களுக்கு 130 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

## 2.3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

**(i)** தமிழ்நாட்டில் **4480** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்கள் வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். வேளாண் இயந்திரங்கள் வாங்குதல், நுண்ணிய நீர்பாசனம், நில மேம்பாடு

மற்றும் கறவை மாடுகள் வாங்குதல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த செயல்களுக்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும் வீட்டுக் கடன், சுய உதவி குழுக்களுக்கான கடன்கள் போன்ற விவசாயம் சாரா கடன்களும் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் குழுக்களாக சேர்ந்து கடன் பெறும் வசதி பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறது. இச்சங்கங்கள், விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு வேளாண் கருவிகள் விற்பனையையும் மேற்கொள்கின்றன. இது தவிர கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் **24,477** பொது விநியோகத்திட்டக் கடைகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொது மக்களுக்கு வேளாண் பாதுகாப்பு மையம், வேளாண் சேவை மையம், பொது சேவை மையம் ஆகியவற்றின் மூலம் பல்வேறு பணிகளைச் செய்திடும் பன்முகப் பணி மையங்களாக மாறி வருகின்றன.

### (ii) பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், ஒருங்கிணைந்த கடன்திட்டம் மூலம் வருவாயை அதிகரித்தல் மற்றும் அத்தியாவசிய பொருட்களை கிடைக்க செய்தல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் போன்று மலைவாழ் மக்களுக்காகப் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை செய்ய உதவுதல் மற்றும் சிறப்பங்காடி நடத்துதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் **22** பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் **1,00,558** பழங்குடியினரும் மற்றும் **8,388** பழங்குடியினரல்லாதோரும் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் **31.03.2016–**இல் உறுப்பினராக உள்ளனர். **2015–16 ஆம் ஆண்டில்** இச்சங்கங்கள், **ரூ.127.34 கோடி** அளவிற்கு வணிகம் செய்துள்ளன.

மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆதாய விலைக் கிடைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பொதுவான வணிக முத்திரையிடப்பட்ட சாமை, வரகு, தேன் மற்றும் புளி ஆகிய பொருட்களின் விற்பனை, **20.06.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**30.06.2016 வரை ரூ. 80.88 இலட்சம்** மதிப்பிலான பொருட்கள் இச்சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், ஜவ்வாதுமலை மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் சாமையின் மதிப்பினை கூட்ட ஏதுவாக சாமை அரவை இயந்திரம் நிறுவிட **ரூ.1.50 இலட்சம்** மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**(iii)** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் எளிய முறையில் தங்குதடையற்ற நிதிப் பரிமாற்றம் செய்வதை ஊக்குவிக்க மின்னனு வங்கியியல் சேவை (e-banking) வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாட்டினை மேம்படுத்த தேவையான திருத்தங்கள் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988 மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் துணை விதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களின் திறன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பொது கணக்கியல் மற்றும் மேலாண் தகவல் அமைப்பு அமல்படுத்தப்பட்டதன் மூலம் சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிக்கும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**(iv)** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடந்த ஐந்தாண்டுகளில் கடன் வழங்கிய விவரம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு:–

(தொகை ரூ.கோடியில்)

| விவரம் | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 |
|---|---|---|---|---|---|
| வைப்புத் தொகை | 4,308.19 | 5,633.79 | 5,995.49 | 5,987.72 | 6,874.66 |
| கடன் வழங்கியது | 17,881.99 | 20,582.03 | 20,989.51 | 20,326.63 | 19,409.52 |

## 2.4. கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் சேவைகள்

### (i) பயிர்க்கடன்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்களில் முக்கியமானது பயிர்க்கடன் ஆகும். பயிர்க் கடன் வழங்குவதில் அனைவரையும் உள்ளடக்கும் வகையில் ஆதிதிராவிடர் / பழங்குடியின விவசாயிகள் உள்ளிட்ட புதிய விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகளின் வருவாயினை உயர்த்திடவும், விவசாய உற்பத்தியினை அதிகரிக்கவும் குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. அதன்படி

கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான வட்டிவிகிதம் 9% லிருந்து 7% ஆக குறைக்கப்பட்டு, அதனால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் 2% வட்டி இழப்பீட்டுத் தொகையினை, இந்திய அரசிடமிருந்து பெறப்படும் வட்டி மானியத் தொகையுடன் கூடுதல் மானியமாக மாநில அரசு வழங்குகின்றது. **பயிர்க் கடனுக்கு 7% வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பி செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.** விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை அரசே ஏற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக வட்டி மானியமாக வழங்குகிறது.

2015–16 ஆம் ஆண்டில் பயிர்க்கடன்கள் வழங்க **ரூ.5,500** கோடிக்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில், **10,74,419** விவசாயிகளுக்கு **ரூ.5,868.31** கோடிக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் **1,49,458** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு **ரூ.711.22 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.** விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் ஊக்கத்தொகையாக மாநில அரசு **ரூ.200 கோடி** நிதியைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு விடுவித்துள்ளது. அதில் **ரூ.50** கோடி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளை

உள்ளடக்கியதாகும். **2016–17** ஆம் ஆண்டில், **ரூ.6,000** கோடி பயிர் கடன் வழங்க அரசால் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. **2016–17** ஆம் ஆண்டிற்கு, பயிர்க்கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் ஊக்கதொகைக்காக **ரூ.200 கோடி** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்**

இது வரை எந்த நிறுவனங்கள் மூலமும் கடன் பெற இயலாதிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர் மற்றும் வாய்மொழிகுத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய **40,000** கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் அனைவரையும் வங்கிப் பரிமாற்றத்திற்குள் கொண்டு வருவதை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்குப் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இவர்கள் கூட்டாக உரங்கள் மற்றும் விதைகளை வாங்கவும், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைக் கையாள்வதற்கும் சாத்தியமாகியுள்ளது. **2015–16** ஆம் ஆண்டில், **19,127** கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு **ரூ.522.50** கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் **627** கூட்டுப் பொறுப்புக்

குழுக்களுக்கு **ரூ.14.49** கோடி முதலீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

மூலதனங்களை உருவாக்கும் நோக்குடனும், நிலைத்த வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யவும், வேளாண் துறையில் முதலீடு செய்வது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, **2015–16** ஆம் ஆண்டில் **50,679** விவசாயிகளுக்கு **ரூ.273.42 கோடி** அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் **5,423** ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு **ரூ.29.43 கோடி** அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (iv) தானிய ஈட்டுக் கடன்

விவசாயிகளின் உடனடி நிதித்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகளில் அவர்களின் விளைபொருட்களை இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இது சிறு மற்றும் குறு விவசாயிகள் அறுவடைக்காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்ற போது தானியங்களைச் சேமித்து வைத்து, இலாபகரமான விலை கிடைக்கின்ற போது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் **2015–16** ஆம் ஆண்டில் **12,836** விவசாயிகளுக்கு **ரூ.223.55 கோடி** அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

**(v) சிறு வணிகர்களுக்கான சிறு வணிகக் கடன்**

மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் தனித்தன்மை வாய்ந்த இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பூ வணிகம், காய்கறிகள் மற்றும் பழங்கள் வணிகம் செய்தல், பெட்டிக்கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு எவ்விதப் பிணையமுமின்றி **ரூ.10,000/–** கடன் வழங்கப்படுகிறது. **இத்திட்டத்தின் கீழ் 2015–16 ஆம் ஆண்டில் 3,18,401 நபர்களுக்கு ரூ.246.60 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.**

**(vi) சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடர்ந்து சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கலை அதிகரித்து அவற்றின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில் **26,726** சுயஉதவி குழுக்களுக்கு **ரூ.617.89** கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(vii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர் சிறு தொழில் தொடங்கவும், சேவை மையங்கள் அமைக்கவும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் **ரூ.10 இலட்சம்** வரை கடன்கள் வழங்கி வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில் **12,823** மகளிர் தொழில் முனைவோருக்கு **ரூ.50.82** கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(viii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு **ரூ.1 இலட்சம்** வரை கடனாக வழங்குகின்றன. இக்கடன்கள் **36** தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். **2015–16** ஆம் ஆண்டில் **10,457** மகளிருக்கு **ரூ.51.64** கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவர்களின் வருமானத்தை உயர்த்திடும் செயல்களுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. **2011–12** முதல் உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும்

மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்களை வழங்கி வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில் **6,981** மாற்று திறனாளிகளுக்கு **ரூ.30.58 கோடி** கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(x) கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன நிதி உதவி**

மாநில அரசு, கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிர், மாற்றுத்திறனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்குச் சிறப்பு முன்னுரிமை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு ஒரு உறுப்பினருக்கு **ரூ.2,500/–** வீதம் பங்கு மூலதன மானியமாக வழங்கப்பட்டது.

**2014–2015** ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் 1000 மகளிர் உறுப்பினர்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் **1,000** மாற்றுத்திறனாளி உறுப்பினர்கள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் **1,000** ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் **1,000** மகளிர் உறுப்பினர்கள் ஆக மொத்தம் 4,000 உறுப்பினர்களுக்கு **ரூ.1 கோடி** பங்கு மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**2015–2016** ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் **600** மாற்றுதிறனாளி உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன மானியமாக **ரூ.2,500/–** வீதம் **ரூ.15 இலட்சமும்,** நகர கூட்டுறவு வங்கிகளின் **600** மகளிர் மற்றும் **600** ஆதிதிராவிடர் / பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியமாக **ரூ.2,500/–** வீதம் மொத்தம் **ரூ.30 இலட்சம்** வழங்கப்பட்டுள்ளன.

**(xi) பயிர்க்காப்பீடு**

**2015–2016** ஆம் ஆண்டில் **3,71,351** விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மூலம் இழப்பீட்டுத் தொகை **ரூ.586.69 கோடி** வழங்கப்பட்டது.

**(xii) நுண் காப்பீடு**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் முகவர்களாக காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ஆயுள் மற்றும் பொது காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுக் கட்டணம் வசூலிக்கின்றன. நுண்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் **2015–16** ஆம் ஆண்டில், **12,305** நபர்கள் சேர்க்கப்பட்டு **ரூ.5.43 இலட்சம்** காப்பீட்டுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**(xiii) வறட்சி நிவாரணம்**

தமிழ்நாடு அரசு **2012–13** ல், **31** மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தது. டெல்டா மாவட்டங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக **3,48,681** விவசாயிகளுக்கு **ரூ.517.98 கோடி** வறட்சி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. டெல்டா அல்லாத பகுதிகளில், **15,96,887** விவசாயிகளுக்கு **ரூ.766.60 கோடி** வழங்கப்பட்டுள்ளது.

**(xiv) பயிர் இழப்பீடு நிவாரணம்**

டிசம்பர் **2015** ல் பெய்த பெரு மழை காரணமாக, பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணமாக **9,21,949** விவசாயிகளுக்கு **ரூ.428.83 கோடி** வழங்கப்பட்டுள்ளது.

**(xv) அம்மா சிறு வணிகக் கடன்**

தமிழ்நாடு முழுவதும் 2015 ஆம் ஆண்டில் வெள்ளம் பாதித்த மாவட்டங்களில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நகர்ப்புறங்களில் வியாபாரம் செய்து வரும் தெரு வியாபாரிகள், குறிப்பாக மகளிர் தங்களது வாழ்வாதாரத்திற்காக காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் மீன் விற்பனை போன்ற தத்தமது வியாபாரத்தினை மீண்டும் துவக்க, அம்மா சிறுவணிகக் கடன்

திட்டத்தின் கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் / நகர கூட்டுறவு வங்கிகள் சொந்த நிதிமூலம் **ரூ.5,000/–** வரை சிறு வணிகக் கடன் வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு **2,22,592** நபர்களுக்கு **ரூ.111.26 கோடி** அளவிற்கு அம்மா சிறுவணிகக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**2.5. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்வகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற்றுதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும் பணிகளை மட்டுமே செய்வதாக அல்லாமல் பல்வகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

**(i) வேளாண் இடு பொருள்கள் விநியோகம்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் உரம், விதைகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை செய்வதற்கு ஊக்கப்படுத்தப்பட்டன. **2015–16** ஆம் ஆண்டில், **ரூ.665.71 கோடி** அளவிற்கு உரங்களும், **ரூ.11.25 கோடி** அளவிற்கு விதைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### (ii) வேளாண் பாதுகாப்பு மையம்

விவசாயிகள் பயன்பெறும் வகையில் மண் பரிசோதனை, நீர்ப் பரிசோதனை மற்றும் ஆலோசனை பணிகளை வழங்குவதற்கு **190** வேளாண் பாதுகாப்பு மையங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்திலிருந்தும் **50:50** என்ற பங்களிப்பில் ஒவ்வொரு வேளாண் பாதுகாப்பு மையமும் **ரூ.6 இலட்சம்** செலவில் துவங்கப்பட்டது.

### (iii) வேளாண் சேவை மையங்கள்

கிராமப்புறங்களில், முக்கியமான பருவ காலங்களில் வேளாண் பணிகள் மேற்கொள்வதற்கான ஆட்கள் பற்றாக்குறை பெருகிவரும் நிலையில், வேளாண்மையில் இயந்திர மயமாக்குதல் என்பது இன்றியமையாததாகிறது. இவ்வியந்திர மயமாக்குதலின் பயன்பாட்டினைப் பெற சிறு மற்றும் குறு விவசாயிகளின் சிறு விளை நிலங்களும், குறைந்த வளமும் சாதகமாக இல்லை. எனவே விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்ள ஏதுவாக வேளாண் இயந்திரங்கள்

மற்றும் பண்ணைக் கருவிகளை நியாயமான வாடகையில் பெறும் வகையில் வேளாண் சேவை மையங்கள் **2,104** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வேளாண் சேவை மையங்கள், மினி டிராக்டர்கள், பவர்டில்லர் மற்றும் நெல் நடவு இயந்திரங்கள் ஆகியவற்றை வாடகைக்கு வழங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மை சேவை மையங்களுக்காக வாங்கும் விவசாய கருவிகளுக்கு **50 %** மானியம் வரை அரசு அளித்தது. இதன் உச்சவரம்பு ஒரு சங்கத்திற்கு **ரூ.20 இலட்சம்** ஆகும். வேளாண் சேவை மையம் மூலமாக **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.4.11 கோடி** அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளது.

**(iv) வாழைத்தார் குளிரூட்டும் மற்றும் கனியவைக்கும் நிலையம்**

**2012–13** ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளின் நன்மைக்காக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் **ரூ.28 இலட்சம்** செலவில் வாழைத்தார் குளிரூட்டும் மற்றும் கனியவைக்கும் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **20.06.2013** அன்று மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. **2014–15** ம் ஆண்டில், **5** வாழைத்தார் குளிரூட்டும் மற்றும் கனிய வைக்கும்

நிலையம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவியுடன் மகாதானபுரம் (கரூர்), காரவிளை (கன்னியாகுமரி), உய்யக் கொண்டான் திருமலை (திருச்சிராப்பள்ளி) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் கோபிசெட்டிப்பாளையம் (ஈரோடு), அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றில் தலா ஒன்று என்ற விகிதத்தில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பணிகள் பல நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

**(v) பொதுச் சேவை மையங்கள்**

அரசின் சேவைகளைக் குடிமக்களுக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுச் சேவை மையங்கள் இதர தனியார் மற்றும் சமூகத் துறையால் வழங்கப்படும் சேவைகளையும் வழங்கி வருகின்றன. பொதுமக்கள் தற்போது அரசின் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருவாய்த் துறையால் வழங்கப்படும் வருமானச் சான்று / சாதிச் சான்று / பிறப்பு / இறப்புச் சான்று / பட்டா / சிட்டா / சமூக நலத்துறையின் சேவைகளான திருமணத் திட்டங்கள் மற்றும் மின்கட்டணம் செலுத்துதல், காப்பீட்டு

பிரிமியம் செலுத்துதல், அலைபேசி ரீசார்ஜ், டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல், மின்னணு பயணச் சீட்டு பதிவு செய்தல் போன்ற மின்னணு சேவைகளை இம்மையங்கள் வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மின்னணு சேவை வழங்கும் பொருட்டு **4423** பொதுச் சேவை மையங்களை ஏற்படுத்தியுள்ளன. இம்மையங்களின் மூலம் **50,97,262** சேவைகளை கிராம மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வழங்கியுள்ளன. இதன் மூலம் **2015–2016** ஆம் ஆண்டில் **ரூ.19.11 கோடி** வருவாயினை ஈட்டியுள்ளன.

**2.6. கூட்டுறவுச் சங்கங்களின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்**

**(i) சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**2015–16** ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **110** கூட்டுறவு நிறுவனங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் **ரூ.23.73 கோடி** மதிப்பீட்டில் கட்டப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு இதுவரை **14** கூட்டுறவு நிறுவனங்களில் கட்டுமான பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிறுவனங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(ii) கூட்டுறவு வங்கிகளின் புதிய கிளைகள் துவங்குதல்**

**2015–16** ஆம் ஆண்டில் **8** கூட்டுறவு வங்கிகளின் **27** புதிய கிளைகள் **ரூ.2.70 கோடி** செலவில் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு, இதுவரை **13** கிளைகளில் பணிகள் முடிக்கப்பட்டு அதில் **3** புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளது. எஞ்சிய **14** கிளைகளில் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(iii) கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்குதல்**

கூட்டுறவு வங்கிகளின் சேவையை உயர்த்த ஏதுவாக **ரூ.4.23 கோடி** மதிப்பீட்டில் **39** கூட்டுறவு நிறுவனங்கள் நவீனமயமாக்கப்படும் என **2015–16** ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில், அறிவிக்கப்பட்டது. இதன்படி **25** கூட்டுறவு நிறுவனங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கூட்டுறவுச் சங்கங்களில் நவீனமயமாக்கல் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(iv) கணினிமயமாக்கல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வழங்கப்பட்டு வரும் சேவைகளை மேம்படுத்த அவற்றைக் கணினிமயமாக்குதல் அவசியமானதாக உள்ளது. **2012–13** ஆம் ஆண்டில் **1,121** தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தலா **ரூ.25,000/-** வீதம் கணினிகள் வாங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி அச்சங்கங்களுக்கு **ரூ.2.80 கோடி** செலவில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**(v) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

**(அ) உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்**

கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பினை வலுப்படுத்தும் நோக்கில் **2012-13** ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளின் **1,038** கிளைகளில், அதாவது தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் அனைத்து கிளைகளிலும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் அனைத்து கிளைகளிலும், நகரக்கூட்டுறவு வங்கிகளின் அனைத்து கிளைகளிலும் உட்சுற்று தொலைக்காட்சி நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் **1,195** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இதர கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் நிறுவும் பணி முன்னேற்றத்தில் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், **2015-16** ஆம் ஆண்டில்,

**2,966** கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் அமைக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(ஆ) பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பறை**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மீதான பொது மக்களின் நம்பிக்கையை அதிகரிக்க போதிய அடிப்படைப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்கள் தங்களுடைய பணம் மற்றும் ஈடாக வைத்துள்ள நகைகள் இச்சங்கங்களில் பாதுகாப்பாக உள்ளது என உணர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **2015–16** ஆம் ஆண்டில் 203 கூட்டுறவு நிறுவனங்களில் **ரூ.8.32 கோடி** செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பறை அமைக்கப்படும் என அறிவித்தார். இப்பணியானது **190** கூட்டுறவு நிறுவனங்களில் முடிக்கப்பட்டுள்ளன. 13 கூட்டுறவு நிறுவனங்களில் விரைவில் முடிக்கப்படவுள்ளன.

**2.7. கூட்டுறவுக் கடன் அமைப்புகளுக்குப் புத்துயிரளித்தல்**

**(i) குறுகிய காலக் கூட்டுறவு கடன் அமைப்பிற்கு புத்துயிரளிக்கும் திட்டம்**

பேராசிரியர் A.வைத்தியநாதன் அவர்கள் தலைமையிலான சிறப்புப் பணிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கூட்டுறவு அமைப்புகள் திறம்பட மற்றும் துடிப்புடன் செயல்படவும், அவற்றை நன்முறையில் நிர்வாகம் செய்யவும், மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற சீரிய அமைப்பாக மாற்றிடவும் மறு சீரமைப்புச் செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இப்புனரமைக்கும் திட்டத்தின் கீழ் மறு மூலதன நிதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்புகளைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவற்றுக்குப் புத்துயிரளிக்கும் பொருட்டு மாநில அரசின் பங்கான **ரூ.385.45 கோடி** மறு மூலதன உதவியாக முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. புத்துயிர் திட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட தொகை **ரூ.1,676.37 கோடியில்,** மத்திய அரசு

தனது பங்காக **ரூ.1,078.84 கோடி** மட்டுமே விடுவித்துள்ளது. மீதமுள்ள **ரூ.597.53 கோடி** இன்னும் விடுவிக்க வேண்டியுள்ளது.

**(ii) சிறப்புக் காசுக் கடன் நிதியுதவி**

**139** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு, தலா **ரூ.50 இலட்சம்** வீதம் மொத்தம் **ரூ.69.50 கோடி** சிறப்புக் காசுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக **2013–14** ஆம் ஆண்டில் **72** சங்கங்களுக்கும், இரண்டாம் கட்டமாக **2014–15** ஆம் ஆண்டில் **67** சங்கங்களுக்கும் இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**3. நீண்டகாலக் கடன் அமைப்பு**

நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினையும் வட்ட / வட்டார அளவில் செயல்படும் **180** தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கடன் நிறுவனங்கள், விவசாயிகள் /பொது மக்களின் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத நோக்கங்களுக்காக நீண்ட காலக் கடன்களையும் மற்றும் சிறு பாசனம், தோட்டக்கலை, மலைத்தோட்டப்பயிர்கள் மற்றும் இதர வேளாண்மை சார்ந்த

தொழில்களுக்காக அதன் உறுப்பினர்களுக்கு முதலீட்டுக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

### 3.1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மறுநிதியாக்கம் தொடர்பான திருத்தப்பட்ட கொள்கையால் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறு நிதியுதவி பெற இயலாத நிலையால் அதன் வழக்கமான கடன் வழங்கும் பணி பாதிக்கப்பட்டது. எனினும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது சொந்த நிதியைக் கொண்டு தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்க நிதியுதவி அளித்து வருகிறது. இந்த வங்கியின் பங்கு மூலதனம் **31.3.2016** அன்று உள்ளபடி **ரூ.40.37 கோடிகளாகவும்**, வைப்புகள் **ரூ.194.57 கோடிகளாகவும்** உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அதன் கிளைகள் மற்றும் விரிவாக்க மையங்களின் மூலம், **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.271.00 கோடி** அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளது.

**3.2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சிறு பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை சார்ந்த இதர பணிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்தன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத நிலையில், இவ்வங்கிகளிடம் உள்ள நிதியிலிருந்து நகைக்கடன்கள் வழங்கி வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில், இவ்வங்கிகள் **ரூ.936.77 கோடி** அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன. மேலும், இவ்வங்கிகளின் வணிக நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதமாகவும் பெருவாரியான மக்கள் நன்மையடையும் விதத்திலும் **122** பொதுச் சேவை மையங்களை இவ்வங்கிகள் நடத்தி வருகின்றன.

**3.3 ஒருமுறை கடன் தீர்வுத் திட்டம் 2014**

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் **31.03.2014** அன்று நிலுவையிலுள்ள பண்ணை சாராக் கடன்களுக்காக ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் **2014**ல் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி **1,871**

விவசாயிகள் கடன் நிலுவைத் தொகை **ரூ.42.10 கோடி** முழுமையாக செலுத்தி, **ரூ.39.71 கோடி** தள்ளுபடி பெற்றுள்ளார்கள்.

## 4. நகர கூட்டுறவுக் கடன் அமைப்பு

நகர கூட்டுறவுக் கடன் அமைப்பானது நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கியதாகும். இந்நிறுவனங்கள் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் நடுத்தர வருவாய் பிரிவினரின் வங்கியியல் மற்றும் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் **128** நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் **84** நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

### 4.1. நகரக் கூட்டுறவு வங்கிகள்

தமிழ்நாட்டில் **128** நகரக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரங்கள் மற்றும் புற நகர்களில் வசிக்கும் மக்களுக்கு வங்கியியல் சேவை மற்றும் கடன் வழங்கும் பணியினைச் செய்து வருகின்றன. இவ்வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும்

பண்ணை சாராக் கடன்களை வழங்கி வருகின்றன. **2015–16ம் ஆண்டில்,** நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் **ரூ.6,644.30 கோடி** கடனாக வழங்கப்பட்டுள்ளது. **31.3.2015** தேதியில் **ரூ.6,420.94** கோடியாக இருந்த இவ்வங்கிகளின் வைப்புத் தொகை **31.3.2016** தேதியில் **ரூ.8,244.76 கோடியாக** உயர்ந்துள்ளது. **2015–16** ஆம் ஆண்டில் நகர கூட்டுறவு வங்கிகளால் சிறு வணிகர்களைக் கொண்ட **1,385** கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு **ரூ.77.50 கோடி** கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு வணிகர்கள், தனியார் கடன் வழங்குபவர்களுக்கு அதிகளவிலான வட்டி கொடுப்பதைத் தவிர்க்க இவ்வங்கிகள் உதவி புரிந்துள்ளன. **இவ்வாறான கடன்கள் 2016–17ம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.**

மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. இதன்படி, அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளின் தலைமையகம் மற்றும் கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகளில் மைய வங்கியியல் சேவையைச் செயல்படுத்தும் பணி முன்னேற்றத்தில் இருந்து வருகிறது. இது நகர கூட்டுறவு வங்கிகளின் செயல்படும்

திறனை அதிகரித்து பொது மக்களுக்கு மேம்பட்ட சேவை அளிக்க உதவும்.

### 4.2. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரங்கள் மற்றும் புற நகர்களில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் **84** நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் பண்ணை சாராக் கடன்கள் ஆகிய கடன்களை வழங்கி வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் **ரூ.1,114.62 கோடி** அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. **31.03.2015** தேதியில் **ரூ.1,017.88 கோடியாக** இருந்த இச்சங்கங்களின் **வைப்புத்** தொகை **31.03.2016** தேதியில் **ரூ.1,164.89 கோடியாக** உயர்ந்துள்ளது. **2015–16ம்** ஆண்டில் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சிறு வணிகர்களைக் கொண்ட **56** கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் நகர்புறங்களில் உருவாக்கப்பட்டு **ரூ.4.97 கோடி** அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள்

மாநிலத்தில் மொத்தம் **1,767** பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும் உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. இச்சங்கங்கள் **31.03.2016** தேதியில் **ரூ.1,782.56 கோடி** பங்குத் தொகையுடனும், நடைமுறை மூலதனமாக **ரூ.10,870.16 கோடியுடனும்** உறுப்பினர்களுக்கு **ரூ.5,860.93 கோடி** அளவிற்கு கடன்கள் வழங்கியும் செயல்பட்டு வருகின்றன.

### 6. பணியாளர் நலன்

### (i) கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான ஊதிய உயர்வு

தமிழ்நாடு அரசு, பணியாளர்களின் நலனுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது. **120** நகரக் கூட்டுறவு

வங்கிகளின் **1,701** பணியாளர்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் **152** பணியாளர்களுக்கும் **01.01.2012** முதல் அதிகபட்சமாக **20** சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கியதன் காரணமாக முறையே ஆண்டொன்றுக்கு **ரூ.13.33 கோடி** மற்றும் **ரூ.1.55 கோடி** அளவிற்கு இவ்வங்கிகளில் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணியாற்றும் **15,778** பணியாளர்களுக்கு **01.04.2013** முதல் அதிகபட்சமாக **12** சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால், ஆண்டொன்றுக்கு **ரூ.26.89 கோடி** அளவிற்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

**(ii) புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2012**

அரசு ஊழியர்களுக்குச் செயல்படுத்தப்படும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் **2012–ஐ** கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கும் 2014ல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. **6,245** கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் **41,061** சங்க பணியாளர்கள் மற்றும் இவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் **1,14,986** பேர் இத்திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ளனர். **30.06.2016** முடிய **1,326** பணியாளர்கள்/குடும்ப உறுப்பினர்கள்

**ரூ.5,34,65,131** அளவிற்கு புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

**7. வேளாண்மைக் கடன் தள்ளுபடித் திட்டம் 2016**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளின் நலன் காப்பதற்காக, கூட்டுறவு நிறுவனங்களில் **31.03.2016** அன்று நிலுவையிலிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் அனைத்துப் பயிர்க்கடன்கள், மத்தியக் கால வேளாண்மைக் கடன்கள் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன்கள் என **16,94,145** விவசாயிகளின் **ரூ.5,780.92 கோடியைத்** தள்ளுபடி செய்ய **23.05.2016** அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

## 8. விருதுகள்

**(i)** தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி **2011–12** ஆம் ஆண்டில் கூட்டுறவு வேளாண் கடன் அமைப்புகளுக்கான “சிறந்த செயல்பாட்டிற்கான கூட்டுறவு நிறுவனம்” என்ற விருதினை இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து பெற்றுள்ளது.

(ii) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி **2011–12** ஆம் ஆண்டில் அகில இந்திய வரைவோலை பரிமாற்றத் திட்டத்திற்காக “முதல் பரிசினை” மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(iii) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி **2011–12** ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக "இரண்டாம் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது

(iv) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி 2012–13 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக "முதல் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(v) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி **2013–14** ஆம் ஆண்டில் தேசிய மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டிற்கான "சிறந்த மாநில முகமை அமைப்பு" விருதினை தேசிய மாற்று திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து பெற்றுள்ளது.

(vi) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் வேளாண் கூட்டுறவுப் பணியாளர்கள் பயிற்சி நிலையம், **2012–13** ஆம் ஆண்டில் சிறந்த செயல்பாடுகளுக்காக "இரண்டாம் பரிசினை" தேசிய கூட்டுறவு பயிற்சி குழுமத்திடமிருந்தும், **2012–13** ஆம் ஆண்டில் சிறந்த செயல்பாடுகளுக்காக "மூன்றாம் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்தும், **2013–14** ஆம்

ஆண்டில் சிறந்த செயல்பாடுகளுக்கான "முதல் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்தும் பெற்றுள்ளது. **2014–15** ஆம் ஆண்டிற்கு ஒட்டு மொத்த செயல்பாட்டிற்கான தேசிய விருதினையும் மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(vii) தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி **2013–14** ஆம் ஆண்டில் தேசிய அளவில் **மிகுதியாக வைப்புகளைச் சேகரித்தமைக்கான "கேடயத்தை"** தேசிய கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(viii) இந்தியாவில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கிகளில், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, **2011–12** ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்காக, "முதல் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(ix) பி.துரிஞ்சிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், தருமபுரி மாவட்டம், 2011–12 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக "இரண்டாம் பரிசினை" மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(x) மகாலட்சுமி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், கெங்கவல்லி, சேலம் மாவட்டம், **2012–13** ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக ‘‘மூன்றாம் பரிசினை’’ மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(xi) திருத்தங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், விருதுநகர் மாவட்டம், **2013–14** ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக ‘‘இரண்டாம் பரிசினை’’ மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

(xii) செ.நாச்சிப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், திருவண்ணாமலை மாவட்டம், **2014–15** ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காக ‘‘இரண்டாம் பரிசினை’’ மாநில கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்திடமிருந்து பெற்றுள்ளது.

இயல் – II

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

### 1. முன்னுரை

**1.1.** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்கள்/ வணிகர்களுக்கும் இடையே இணைப்பு பாலமாக செயல்பட்டு வருகிறது. வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல், விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன் வழங்குதல், வேளாண் விளைபொருட்களைப் பதனிடுதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகக் கிடங்கிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை நியாயவிலைக்கடைகளுக்கு நகர்வு செய்தல் உள்ளிட்டப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

**1.2** மாநிலத்தில் **112** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. **தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED),** மாநில அளவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்குத் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. **தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்**, காவிரி டெல்டா பகுதியில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு, அப்பகுதி விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமானது நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்து வருகிறது. இத்தோடு, குறிப்பிட்ட துணைப் பணிகளுக்கென கூட்டுறவு அச்சகம், தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவையும் உள்ளன.

## 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

**2.1.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **20.02.1959** இல் தனது வியாபார நடவடிக்கையைத் தொடங்கியது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உர விற்பனை மற்றும் இதர இடுபொருட்களை விற்பனை செய்திடும் பணியில் இணையம் ஈடுபட்டு வருகிறது.

**2015–16**ஆம் ஆண்டில் **ரூ.608.96 கோடி** மதிப்பிலான **4,54,583 மெட்ரிக் டன்** உரங்களை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விநியோகம் செய்துள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் பாமணி என்ற இடத்தில் உரக்கலவை ஆலை ஒன்று **1970** ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் தொடங்கப்பட்டு, பாமணி **17:17:17** என்ற வணிக முத்திரையிடப்பட்ட உரக்கலவையினை உற்பத்தி செய்து வருகிறது. இதன் மூலம் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.18.34கோடி** மதிப்பிலான **10,000 மெட்ரிக் டன்** உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

**2.2.** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், இரசாயன உரங்களை விநியோகிக்க, **2015–16** ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு **ரூ.139.44 கோடி** வட்டியில்லா வழிவகை முன்பணமாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கியுள்ளது.

**2.3.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **27,890 மெட்ரிக் டன்** கொள்ளளவு கொண்ட **39** கிடங்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தை வளாகம் மற்றும் பேசின் பிரிட்ஜ் ஆகிய இடங்களில் முறையே **2500 மெட்ரிக் டன்** மற்றும் **960 மெட்ரிக் டன்** கொள்ளளவு கொண்ட **2** குளிர்பதனக் கிடங்குகளையும் செயல்படுத்தி

வருகின்றது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்திட கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு வணிக ரீதியிலான ஆதரவை அளித்து வருகிறது. தமிழ்நாட்டில் ஆதரவு விலைத்திட்டத்தினைச் செயல்படுத்திட, தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகமையாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்காக ஆவின் நிறுவனத்திற்கு மாட்டுத்தீவனத்தையும் விற்பனை செய்து வருகிறது. **2015–16**ஆம் ஆண்டில் **ரூ.55.82 கோடி** மதிப்புள்ள **32,813 மெட்ரிக் டன்** மாட்டுத்தீவனம் ஆவின் நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து கோயம்பேடு வணிக வளாகத்தில், ஒரு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையத்தையும், கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையத்தையும் நிறுவி இலாபகரமாக நடத்தி வருகின்றது.

**2.4.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **2015–2016** ஆம் ஆண்டில் **ரூ.608.96 கோடி** அளவிற்கு உரவிநியோகமும், **ரூ.1.80 கோடி** அளவிற்கு பூச்சிக்கொல்லி மருந்து விநியோகமும்

மற்றும் **ரூ.66.48 கோடி** அளவிற்கு விவசாய விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் பணியையும் மேற்கொண்டுள்ளது.

**3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)**

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் **29.01.1941** இல் ஆரம்பிக்கப்பட்டு தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள **12** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல இணையமாக செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம் **977** உறுப்பினர்களுடனும் **ரூ.76.98 இலட்சம்** பங்கு மூலதனத்துடனும் செயல்பட்டு வருகிறது. உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விற்பனை செய்வதும் இவ்விணையத்தின் வியாபார நடவடிக்கைகள் ஆகும். மேலும், நகைக்கடனும் வழங்கப்பட்டு வருகிறது. அச்சகம் ஒன்றும் இணையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இவ்விணையம் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.120.50 கோடி** அளவிற்கு வணிகம் செய்துள்ளது.

## 4. நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் முழுவதும் மற்றும் கோயமுத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியையும் செயல் எல்லையாகக் கொண்டுள்ளது. இச்சங்கம், விவசாயிகளின் விளைபொருட்களான உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, விவசாய பெருமக்களுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்குதல் பணியினையும் தனது முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேட்டுப்பாளையத்தில் இச்சங்கத்திற்கென உரக்கலவை அலகு உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு முகவராகவும் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.3.13 கோடி** அளவிற்கு உத்தேச இலாபத்தை ஈட்டியுள்ளது.

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண் விளைபொருட்களைச் சந்தையிடுதல், உரம் மற்றும் இதர இடுபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவை

**112** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முதன்மை நோக்கங்கள் ஆகும். பெரும்பான்மையான விற்பனைச் சங்கங்கள் அத்தியாவசியப் பொருட்களைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு வருவதோடு, சில நியாய விலைக் கடைகளையும் பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் நடத்தி வருகின்றன. **2014–15–**ஆம் ஆண்டில் **ரூ.2,323.65** கோடியாக இருந்த வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மொத்த வணிகம் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.2467.21** கோடியாக உயர்ந்துள்ளது.

### 5.1. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

#### (i) வேளாண் விளை பொருள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களின் விளை பொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர்களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றன. இச்சங்கங்களில் **2015–16 ஆம் ஆண்டில் ரூ.982.84 கோடி** மதிப்பிலான வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் விவசாய உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பனை செய்து, அத்தொகை சங்கத்தில் அவர்கள் பெற்றுள்ள கடன் நிலுவைக்கு வரவு வைக்கப்படும். சங்கங்கள் தங்களது கடன் நிலுவையினை வசூலிக்க இத்திட்டம் உதவுகிறது. **2015–16** ஆம் ஆண்டில் விற்பனையுடன் இணைந்த கடன் **ரூ.2.96 கோடி** ஈடுகட்டப்பட்டுள்ளது.

**(iii) தானிய ஈட்டுக்கடன்**

விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை அறுவடைக்காலத்தில் அவசர பணத் தேவைகளுக்காக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தானிய ஈட்டுக்கடன்களை வழங்கி வருகின்றன.

உறுப்பினர்களின் விளைபொருட்களைக் கூட்டுறவுச் சங்கக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைத்திருந்து, ஆதாயமான விலை கிடைக்கும் போது விற்பனை செய்ய இயலும். விளை பொருட்களின் சந்தை மதிப்பில் **80** சதவிகிதம் வரை உறுப்பினர்கள் தானிய ஈட்டுக்கடன் பெறலாம். **2015–16** ஆம்

ஆண்டில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் **ரூ.112.22 கோடி** அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன.

**(iv) நகைக்கடன் வழங்குதல்**

**2015–16** ஆம் ஆண்டில் **ரூ.344.12 கோடி** அளவிற்கு நகைக்கடன்கள் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

**(v) தரமான விதைகள் விற்பனை**

தரமான விதைகள் கிடைக்கச் செய்வதே அதிக மகசூல் மற்றும் மேம்பட்ட தரமான வேளாண் உற்பத்திக்கு மிக இன்றியமையாததாகும். நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட தரமான விதைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து, விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில், **ரூ.11.25 கோடி** மதிப்பிற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(vi) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம்**

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திட இயலும் என்பதே தற்போதைய நிலையாகும். வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, உரங்கள் பயிர்க்கடனில் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன், ரொக்கத்திற்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் **2015–16** ஆம் ஆண்டில், **ரூ.665.71 கோடி** மதிப்பிலான **5,23,084 மெட்ரிக் டன்** உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் யூரியா விற்பனை மட்டும் **2,34,351 மெட்ரிக் டன்** ஆகும்.

## 5.2. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்

### (i) ஆதரவு விலைத்திட்டத்தின் கீழ் கொப்பரைக் கொள்முதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், **10.06.2016** அன்று தென்னை பயிரிடும் விவசாயிகளின் நலனைக் காக்கும் பொருட்டு, வெளிச்சந்தை விலை குறைந்துள்ளதால் குறைந்தபட்ச ஆதரவு விலைத்திட்டத்தின் கீழ் கொப்பரைக் கொள்முதல் செய்திட ஆணையிடப்பட்டது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக அரவை கொப்பரை கிலோ ஒன்றுக்கு **ரூ.59.50** எனவும், பந்து கொப்பரை கிலோ ஒன்றுக்கு **ரூ. 62.40** எனவும் கொள்முதல் செய்திட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (TANFED) அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. **180** நாட்களுக்கு கொப்பரைக் கொள்முதல் செய்ய **45** மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்படும் கொப்பரைக்கு வேளாண் உற்பத்தியாளர் சந்தைக்குழு வரி **(1** சதவீதம்**)** மற்றும் மதிப்பு கூட்டு வரி **(5** சதவீதம்**)** ஆகியவற்றிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. **25.07.2016** வரை **672.73 மெட்ரிக் டன்** அளவிலான கொப்பரை **ரூ.4 கோடி**க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த சந்தை குறுக்கீட்டு

நடவடிக்கையினால் வெளிச்சந்தையில் கொப்பரையின் விலை உயர்ந்துள்ளது.

**(ii) சூரியசக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைத்தல்**

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் **10** மாவட்டங்களில் **28** சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வலகுகள் தேங்காயைக் குறைந்த செலவில் தரமான கொப்பரையாகத் துரிதமாக மாற்றுகின்றன. **2014–15** இல் **6,35,316** தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டதை ஒப்பிடுகையில், **2015–16** ஆம் ஆண்டில் **9,13,355** தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

**(iii) கணினி எடைமேடைகள் அமைத்தல்**

விவசாய பெருமக்கள் மற்றும் வணிகர்களின் வேளாண் விளைபொருட்களை துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிப்படுத்திட பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர் மற்றும் பரமக்குடி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் **ரூ.1.20 கோடி** மதிப்பீட்டில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன.

**(iv) விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்**

துடியலூார் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க, **ரூ.19.13 இலட்சம்** மதிப்பில் விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. **2015–16** ஆம் ஆண்டில், **776.63** மெட்ரிக் டன் அளவிற்கு விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

**(V) வேளாண் விளை பொருட்களைப் பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினை கூட்டுதல்**

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயிறு உலர வைக்கும் அலகுகள், மிளகாய் அரவை அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள் போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இப்பதனிடும் அலகுகள் வேளாண் பொருட்களின் மதிப்பைக் கூட்டி உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்க வழிவகை செய்து வருகின்றன. துவரை, மிளகாய், உளுந்து, பச்சைபயறு மற்றும் எள் ஆகிய வேளாண் பொருட்களின் மதிப்பினைக் கூட்டிட முறையே பேரையூர், திருமங்கலம், சிதம்பரம், திருச்செங்கோடு மற்றும் பெருந்துறை ஆகிய ஐந்து இடங்களில் **ரூ.91.35 இலட்சம்** மதிப்பில் பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பதனிடும் அலகுகளில் **2015–16** ஆம்

ஆண்டில் **102.67 மெட்ரிக் டன்** அளவிற்கு வேளாண் விளை பொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

**(vi) உரக்கலவை இயந்திரம் நிறுவுதல்**

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் **2008** ஆம் ஆண்டு முதல் உரக்கலவை உற்பத்தி செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதன் உற்பத்தியை அதிகரித்திட நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் **ரூ.15.00 இலட்சம்** மதிப்பில் ஒரு புதிய உரக்கலவை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. **2015–16** ஆம் ஆண்டில் **10,994 மெட்ரிக் டன்** அளவிலான உரக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு, **ரூ.12.81 கோடி** அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(vii) உலர் களங்கள் அமைத்தல்**

ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பென்னாகரம் மற்றும் கமுதி ஆகிய **6** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் **ரூ.33.45 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ளன.** இது வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு உதவி புரிந்து வருகின்றது.

**(viii) ஊரகப்பகுதியில் கிடங்குகள் கட்டுதல்**

வேளாண் விளை பொருட்களைச் சேமித்து வைக்கும் பொருட்டு, ஊரகப் பகுதிகளில் கிடங்கு வசதிகளை விரிவு படுத்திட அரசு, ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டுநிதி மற்றும் சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்புநிதி உதவியுடன் **2011–12** முதல் **2013–14** வரை **3,317** கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளைக் கட்ட **ரூ.375.58 கோடியைக்** கூட்டுறவுகளுக்கு அரசு மானியமாக வழங்கியுள்ளது. இதனால் கூட்டுறவுச் சங்கங்களின் கிடங்குகளின் சேமிப்புக் கொள்ளளவு **7.98 இலட்சம்** மெட்ரிக் டன்னிலிருந்து **12.10 இலட்சம்** மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. **2014–15** ஆண்டு அனுமதிக்கப்பட்ட கிடங்குகளை கட்டி முடிக்கப்படும் பொழுது மாநிலத்தில் உள்ள கூட்டுறவுகளின் கிடங்கு சேமிப்பு கொள்ளளவு **13** இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும். **2015–16** ஆம் ஆண்டில் **42,085** விவசாயிகளின் **ரூ.1,028.14 கோடி** மதிப்பிலான **3,46,282** மெட்ரிக் டன் விளைபொருட்களைக் கூட்டுறவுச் சங்க கிடங்குகளில் ஈடாக வைத்து **ரூ.478.28 கோடி** அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக, சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி ஒழுங்கு முறை ஆணையம்

**250** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கு மட்டுமே தரச்சான்றிதழ் வழங்கி பதிவு செய்ய இயலும் என்ற நிபந்தனையைத் தளர்த்தி **100** மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கும் தரச்சான்றிதழ் வழங்கிட விலக்களித்துள்ளது. இதுவரை **216** கிடங்குகள், சேமிப்புக் கிடங்கு வளர்ச்சி ஒழுங்கு முறை ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக, **281** விவசாயிகளுக்கு கிடங்கு செலாவணி பற்றுச் சீட்டு வழங்கப்பட்டு **ரூ.5.25 கோடி** அளவிற்கு **7 சதவீத** வட்டியில் தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சிறு மற்றும் குறு விவசாயிகளிடையே மிகவும் பிரபலம் அடைந்து வருகிறது.

### 5.3. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

**2014–15** ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, செங்கம், காரமடை மற்றும் போளூர் ஆகிய கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் **ரூ.1.47 கோடி** மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 2015–16 ஆம் ஆண்டில் மேட்டுப்பாளையம், திருமங்கலம், பேரையூர், வாடிப்பட்டி மற்றும் தேனி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் **ரூ.1.01 கோடி** மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று

வருகின்றன. நகைக்கடனுக்கு ஈடாக வைத்திடும் நகைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் **ரூ.2.27 கோடி** மதிப்பில் **37** பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. **2015–16** ஆம் ஆண்டில் இரண்டு சங்கங்களில் **ரூ.16.80 இலட்சம்** மதிப்பீட்டில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகளும், ஒரு சங்கத்தில் **ரூ.2.84 இலட்சம்** மதிப்பில் பாதுகாப்புக் கதவும் அமைக்கப்பட்டுள்ளன. வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சொத்துப் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு திருமங்கலம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பேரையூர் மற்றும் மேலூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் **ரூ.75.50 இலட்சம்** சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலூர், வாடிப்பட்டி மற்றும் உசிலம்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வேளாண் விளைபொருள் விற்பனையைத் துரிதமாகவும், வெளிப்படையாகவும் மேற்கொள்ளும் பொருட்டு, ஈரோடு, பெருந்துறை, திருச்செங்கோடு, சேலம் மற்றும் ஆத்தூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச்

சங்கங்களில் ஏல நடைமுறை செயல்பாடுகள் **ரூ.43.35 இலட்சம்** மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

## 5.4. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

மிகச்சிறப்பாக செயல்பட்டு வரும் சில வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஒரு சிலவற்றின் செயல்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

**திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்** நாமக்கல் மாவட்டத்தில் **30.04.1930** முதல் செயல்பட்டு வருகிறது. சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டம் முழுவதும் இதன் செயல் எல்லையாக உள்ளது. இச்சங்கம், உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை ஆதாயமான நல்ல விலைக்கு, சந்தையிடுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் தானியஈட்டுக்கடன் மற்றும் நகைகடன்களையும் அதிக அளவில் வழங்கி வருகிறது. மேலும், இச்சங்கம் பெட்ரோல் விற்பனை நிலையம், சமையல் எரிவாயு விநியோக முகமை, மருந்துக்கடைகள், நியாயவிலைக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என பல்வேறுபட்ட வியாபார நடவடிக்கைகள் மூலம் செயல்பாடுகளை விரிவாக்கியுள்ளது.

**2015–16** ஆம் ஆண்டில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மொத்த புரள் வணிகம் **ரூ.314.68 கோடியாகும்.**

**துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS)** கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூாரில் அமைந்துள்ள ஒரு சிறப்பு வகை தொடக்க நிலைச் சங்கமாகும். வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், இச்சங்கம் உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்வதிலும் ஈடுபட்டு வருகின்றது. இந்நிறுவனம் பயிர்க் கடன், அடமானக் கடன் மற்றும் நகைக் கடன் போன்ற கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. இச்சங்கம் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.2.73 கோடி** மதிப்பிற்கு விதை விற்பனை செய்துள்ளது. **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.57.25 இலட்சத்திற்கு** பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு வேளாண் கருவிகளை விற்பனை செய்துள்ளது.

## 6. இதர கூட்டுறவுச் சங்கங்கள்

### (i) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை ஒப்பந்தப் பணிகள் மூலம் உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழ்நாட்டில் **46** தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் **20,505** உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

### (ii) கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் **26** கூட்டுறவு அச்சகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதரர்களின் அச்சுத் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் படிவங்கள் மட்டுமே அச்சிட்டு வந்த இக்கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முதல் கட்டமாக சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஏழு இடங்களில் அமைந்துள்ள கூட்டுறவு அச்சகங்கள் **ரூ.3.68 கோடி** மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக கூட்டுறவு அச்சங்கங்கள் அரசு மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களின் அச்சுப் பணிகளை மேற்கொள்ள இயலும். **2014-15** ஆண்டில்

திருவண்ணாமலை கூட்டுறவு அச்சகத்திற்கு **ரூ.50.00 இலட்சம்** மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு அச்சகங்கள் **2015–16** ஆம் ஆண்டில் **ரூ.62.33 கோடி** அளவிற்கு அச்சுப்பணிகளை மேற்கொண்டுள்ளன.

### 7. தேசிய விருதுகள்

மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள் தேசிய அளவில் வெகுவாக பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, பின்வரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அவற்றின் சிறப்பான செயல்பாட்டிற்காக ‘‘சிறந்த கூட்டுறவு விற்பனைச் சங்கம்’’ என்னும் விருதினை இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து **25.06.2013** அன்று பெற்றன.

1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்
2. பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
3. பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
4. உடுமலைப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், **மே 2015 இல்** ஜெய்ப்பூரில் நடைபெற்ற **தேசிய நறுமணப் பொருட்கள் கண்காட்சியில்** கலந்துகொண்டு சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய அளவில் **2–வது பரிசினைப்** பெற்றது. மேலும், இச்சங்கம் **ஏப்ரல் 2016 இல்** ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய கூட்டுறவு நறுமணப் பொருட்கள் கண்காட்சியில் மஞ்சள், மஞ்சள்தூள், குங்குமம், மல்லித்தூள், மிளகாய்த்தூள் ஆகியவற்றின் விற்பனைக்காக தேசிய அளவில் **முதல் பரிசினைப்** பெற்றுள்ளது.

இயல் – III

# நுகர்வோர் கூட்டுறவுகள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுகள் மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் **34** நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், மூன்றாம் நிலையில் **371** பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளையும் உள்ளடக்கிய மூன்றடுக்கு அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. நுகர்வோர் கூட்டுறவுகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருள்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு, விலை உயர்வை கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன.

## 2. நடவடிக்கைகள்

**2.1.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவு

பண்டகசாலைகளின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு இணைப்புச் சங்கங்களுக்குத் தேவையான அத்தியாவசிய நுகர்பொருட்களை கொள்முதல் செய்யும் ஒரு ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது.

**2.2.** கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் **53** பல்பொருள் அங்காடிகள், **51** சிறு பல்பொருள் அங்காடிகள், **87** சில்லரை விற்பனை நிலையங்கள், **40** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், **87** கூட்டுறவு மருந்தகங்கள், **28** அம்மா மருந்தகங்கள், **6** பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், **30** சமையல் எரிவாயு வழங்கும் நிலையங்கள், **82** மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் மற்றும் **3,241** நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து, அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்வதன் மூலம், பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதில், பெரும்பங்காற்றி வருகின்றன.

**2.3.** பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், **26** கூட்டுறவு மருந்தகங்கள், **28** அம்மா மருந்தகங்கள், **14** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், **2,246** நியாயவிலைக் கடைகளை மாநிலம் முழுதும் நடத்தி வருகின்றன.

## 3. செயல்பாடுகள்

தரமான நுகர்பொருட்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உற்பத்தி மையங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து நியாயமான விலையில் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன. பெரும்பாலான தரமான நுகர்பொருட்கள், கூட்டுக் கொள்முதல் குழுக்கள் மூலமாக, உரிய நடைமுறைகளை பின்பற்றி, மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகின்றன. இவை, நுகர்வோர் கூட்டுறவுகளால் நிர்வகிக்கப்படும் விற்பனை நிலையங்களில் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

**2015–2016** ஆம் ஆண்டில், அனைத்து கூட்டுறவு சங்கங்களின் வழியாக **ரூ.3,404.38 கோடி** மதிப்பிற்கு,

கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 4. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள்

வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருட்களான துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, மிளகாய், நல்லெண்ணை, புளி போன்றவற்றின் விலை திடீரென உயரும் போது, சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலமாக, அவை கிடைக்கும் இடங்களிலிருந்து, குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம், வெளிச்சந்தை விலையைவிட, குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இத்திட்டத்தினை அரசு **01.11.2014** முதல் மேலும் **3** ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

### 4.1. அம்மா மருந்தகங்கள்

**2014–15** ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், ''ஒரு முன்முயற்சியாக ஏற்கெனவே கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் **210** மருந்தகங்களுடன் கூடுதலாக **100** அம்மா மருந்தகங்கள் புதியதாக தொடங்கப்படும்'', என அறிவிக்கப்பட்டது. இதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **26.06.2014** அன்று **10** அம்மா மருந்தகங்கள்

துவக்கப்பட்டன. நாளது தேதியில் **106** அம்மா மருந்தகங்கள், **32** மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அரசு, மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, தலா **ரூ.10.00 லட்சம்** வீதம், **ரூ.10.00 கோடியை** நடைமுறை மூலதனமாக, விலை கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து வழங்கியுள்ளது. இவை, வாடிக்கையாளர்களுக்கு **15%** வரை தள்ளுபடி விலையில் மருந்துகளை வழங்கி வருகின்றன. **2015–16** ஆம் ஆண்டில், கூட்டுறவு மற்றும் அம்மா மருந்தகங்கள் மூலம் **ரூ.124.80 கோடி** மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 4.2. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்

சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, நகர்புற பகுதிகளில், தரமான காய்கறிகளை நியாமான விலையில் வழங்க ஏதுவாக, கூட்டுறவுகள் மூலம் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டன. பசுமையான காய்கறிகள், விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்து, உடனுக்குடன் தொகை செலுத்தி நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்பொழுது மாநிலம் முழுவதும், **2** நகரும் கடைகள் உட்பட **72** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் **32** வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சீரான விநியோகத்திற்கென, **5** வாகனங்கள் **ரூ.70.00 இலட்சம்** மதிப்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டன. காய்கறிகள் அனைத்தும் பசுமையாக (Fresh) வைத்திட இவ்வாகனங்களில் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட தேவையான அனைத்து வசதிகளும் **ரூ.35.00 இலட்சம்** மதிப்பில் செய்யப்பட்டுள்ளன. செட்டிப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், பழனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றிற்கு, தலா ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, காய்கறிகள் அவை விளையும் கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு நகர்வு செய்யப்படுகின்றன. **2** வாகனங்கள் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை நகரும் பண்ணைப் பசுமை கடைகளாக செயல்படுகின்றன.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு, நடைமுறை மூலதன நிதியாக **ரூ.8.34 கோடி**, விலை கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் உட்கட்டமைப்பு வசதி மற்றும் தோற்றப் பொலிவினை மேம்படுத்த, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து **ரூ.1.15 கோடி** நிதி வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில், **20.06.2013** முதல் **30.06.2016** வரை **16,897 மெட்ரிக் டன்** காய்கறிகள் **ரூ.49.47 கோடி** மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4.3.** சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், டிசம்பர் 2015ல் அதிக அளவில் பெய்த பருவமழை பாதிப்பால் காய்கறிகளின் வரத்து குறைந்து, வெளிச்சந்தையில் அவற்றின் விலை உயர்ந்தது. இவ்விலை உயர்வினை கட்டுப்படுத்திட, கூடுதலாக **50** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் **(39** கூட்டுறவு மற்றும் **11** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**) 18.11.2015**இல் சென்னை நகரில் தற்காலிகமாக திறக்கப்பட்டன. கூடுதலாக, **11** நகரும் கடைகள் மூலம், **32** விற்பனை நிலையங்களில் கூட்டுறவுகளால் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. மேற்காண் விற்பனை மையங்களுடன் மேலும் **536** நியாவிலைக் கடைகளில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் தற்காலிக

அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது இம்முயற்சி திடீர் விலை உயர்வினைக் கட்டுக்குள் கொணர்வதில் பெரிதும் உதவியது. தொடர் மழைக்காலத்தில், கூடுதலாக தொடங்கப்பட்ட பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள், நகரும் கடைகள் மற்றும் நியாவிலைக்கடைகளில் **18.11.2015** முதல் **31.12.2015** வரை **ரூ. 70.57 இலட்சம்** மதிப்பிலான **261.182 மெட்ரிக் டன்** காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.4. "ஒரு கிலோ அரிசி ரூ.20/—" திட்டம்

வெளிச்சந்தையில் அரிசி விலை உயர்வதைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒரு கிலோ அரிசி ரூ.20/—க்கு விற்பனை செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் 273 விற்பனை மையங்கள் மூலம் **ரூ.15.52 கோடி** மதிப்பிலான **7,760 மெட்ரிக் டன்** அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 4.5. இதர சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள்

**(i)** வெளிச்சந்தையில் பருப்பு வகைகளின் விலையைக் கட்டுக்குள் வைத்திட சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து (National Consumers

Cooperative Federation), துவரம்பருப்பு மற்றும் உளுந்தம்பருப்பினை கொள்முதல் செய்து, சென்னையில் **20** கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் **5** விற்பனை மையங்கள் வாயிலாக, குறைந்த விலையில் விற்பனை செய்தது. இந்நடவடிக்கையின் கீழ் துவரம்பருப்பு ஒரு கிலோ **ரூ.107/–,** உளுந்தம்பருப்பு ஒரு கிலோ **A**-ரகம் **ரூ.112/–** வீதமும் மற்றும் **B**-ரகம், **ரூ.99/–** வீதமும், **47,097** கிலோ துவரம்பருப்பு மற்றும் **25,731** கிலோ உளுந்தம்பருப்பு விற்பனை செய்யப்பட்டது.

**(ii)** வெளிச்சந்தையில் துவரம்பருப்பின் விலை கிலோ ஒன்றுக்கு **ரூ.180**/– வரையிலும் உயர்ந்து காணப்பட்டபோது, இறக்குமதி செய்யப்பட்ட துவரை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால், உலோகம் மற்றும் கனிம வர்த்தக நிறுவனத்திடமிருந்து (MMTC) கொள்முதல் செய்யப்பட்டு, துவரம்பருப்பாக மாற்றப்பட்டு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களின் **71** விற்பனை மையங்கள் மூலம், **01.11.2015** முதல் ஒரு கிலோ **ரூ.110/–** விலையில், **323 மெட்ரிக் டன்** துவரம்பருப்பு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இயல் – IV

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

### 1. முன்னுரை

**1.1.** அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதில் பொதுவிநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகத்தில் பொதுவிநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகிறது. மாநிலத்தில் மொத்தம் உள்ள **34,686** நியாயவிலைக்கடைகளில் **32,546** நியாயவிலைக்கடைகளை கொண்டு ஒரு விரிவான விநியோக தொடரமைப்பை கூட்டுறவுகள் உருவாக்கியுள்ளன.

**1.2.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை **96** முதன்மைச் சங்கங்கள், அதாவது **25** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், **59** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், **9** பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், **3** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் **3,945** இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு

அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. மேலும் **8** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், **35** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், **148** பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், **120** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், **5** பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், **11** இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும் ஆக மொத்தம் **327** கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2. நியாய விலைக் கடைகள்

**2.1.** மொத்தமுள்ள **34,686** நியாயவிலைக்கடைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் **32,546** நியாயவிலைக் கடைகளை செயல்படுத்தி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ எண் | நியாயவிலைக்கடைகள் மற்றும் குடும்ப அட்டைகளின் விவரம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | முழுநேரம் | 17,432 | 6,192 | 23,624 |
| 2. | பகுதிநேரம் | 8,487 | 435 | 8,922 |
| 3. | மொத்த நியாயவிலைக்கடைகள் | **25,919** | **6,627** | **32,546** |
| 4. | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | **1,20,45,570** | **65,06,442** | **1,85,52,012** |

**2.2.** கூட்டுறவுச் சங்கங்கள் நியாயவிலைக்கடைகளை மட்டுமின்றி, பிரத்தியேகமாக **259** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களையும் நடத்தி வருகிறது. நியாயவிலைக்கடைகள் மூலம் சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாமாயில் ஆகியவை அதிகபட்ச மானிய விலையிலும், கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, அம்மா உப்பு மற்றும் அரசு உப்பு போன்றவை நியாயமான விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 3. நகரும் நியாய விலைக் கடைகள்

**3.1.** மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இடையூறு இல்லாமல் விநியோகம் செய்யும் வகையில் மலைப்பகுதிகளில் மற்றும் எளிதில் அணுக இயலாத பகுதிகளில், நடமாடும் நியாயவிலைக்கடைகளாக செயல்பட **2012–13**ம் ஆண்டில் **10** பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒரு வாகனம் வீதம் **10** வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து **ரூ.94.95 இலட்சம்** மதிப்பில் வழங்கப்பட்டது. **2013–14** ஆம் ஆண்டில், மேலும் **5** வாகனங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் விழுப்புரம் மாவட்டத்தில் மோட்டாம்பட்டி மற்றும் கிளாக்காடு ஆகிய இரண்டு பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் திருப்பூர்

மாவட்டத்தில் இராவணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், சென்னை நகர்ப்பகுதியில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை ஆகிய சங்கங்களுக்கு தலா **1** வாகனம் வீதம் **5** வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும், **ரூ.66.82** இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன. மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் **2015–16**ம் ஆண்டு முதல் சொக்கலால் ஆலை தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை மற்றும் இருக்கன்துறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் **2** நகரும் நியாயவிலைக்கடைகள் இயங்கி வருகின்றன. தற்பொழுது மலைப் பகுதிகளிலும் மற்றும் எளிதில் அணுக இயலாத ஊரக பகுதிகளிலும் அத்தியாவசியப் பொருட்களை, மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கே கொண்டு சென்று விநியோகம் செய்ய **34** நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் **19** குடும்பங்கள் மட்டுமே உள்ள பெரிய பழமலை கிராமத்திற்கும், திருப்பூர் மாவட்டத்தில் இராவணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திலிருந்து **70** கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மாவடைப்பு என்ற மலைகிராமத்திற்கும் நகரும் நியாயவிலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நகரும் நியாயவிலைக் கடைகள் மூலமாக

**271** கிராமங்களிலுள்ள **26,352** குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறுகின்றனர். இவை தவிர சென்னை நகரில் **2** நகரும் நியாய விலைக் கடைகள் மூலம் **52** தெருக்களிலுள்ள **10,637** குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் கூடுதலாக மலைவாழ் பழங்குடி பயனாளிகளுக்கு தாட்கோ நிதிஉதவியுடன் **43** வாகனங்கள் வாங்கப்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளிலிருந்து நியாயவிலைக்கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களின் நகர்வு பணிக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 4. நியாய விலைக் கடைகளின் இருப்பை குறுஞ்செய்தி வசதி மூலம் கண்காணித்தல்

பொதுவிநியோகத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்தவும், அன்றாடம் அத்தியாவசியப் பொருட்கள் நியாயவிலைக்கடைகளுக்கு நகர்வு செய்வது மற்றும் கடைகளில் உள்ள இறுதி இருப்பு நிலையினையும் அறிந்து கொள்ளவும் **ரூ.31.74 இலட்சம்** மொத்த செலவில் குறுஞ்செய்திவழி கண்காணிப்பு சேவை (SMS based monitoring system) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் அத்தியாவசியப்பொருட்கள் குறைவாக உள்ள நியாய

விலைக் கடைகள் உடனடியாக கண்டறியப்பட்டு, அக்கடைகளுக்கு உடனுக்குடன் பொருட்கள் அனுப்பப்படுகிறது.

## 5. இதர பொருட்களின் விற்பனை விவரம்

### (i) ஊட்டி தேயிலை விற்பனை விவரம்

சர்வதேச சந்தையில் தேயிலை தூளுக்கு ஏற்பட்ட கடும் விலை வீழ்ச்சியின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கடந்த **2001** ஆம் ஆண்டில், வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு சிறு தேயிலை விவசாயிகளின் தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் (INDCOSERVE) நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. **2014–15ம்** ஆண்டு **3,099** மெட்ரிக் டன்னும், **2015–16**ல் **3,304** மெட்ரிக் டன்னும் ஊட்டி தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### (ii) அம்மா உப்பு விற்பனை விவரம்

அயோடின் பற்றாக் குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து அயோடின் செறிவூட்டப்பட்டு உப்பு

கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவுத்துறை நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக, விற்பனை செய்யப்படுகின்றன. **2015–16**ல் **36,679 மெட்ரிக் டன்** அம்மா உப்பு மற்றும் அரசு உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 6. நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் **32,546** நியாயவிலைக்கடைகளின் கட்டடங்களின் விவரம் பின்வருமாறு:–

| வரிசை எண் | விவரம் | நியாயவிலைக்கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **1** | சொந்தக் கட்டடம் | 4,231 |
| **2** | அரசுக் கட்டடம் | 15,321 |
| **3** | வாடகையில்லா கட்டடம் | 5,320 |
| **4** | வாடகைக் கட்டடம் | 7,674 |
| | **மொத்தம்** | **32,546** |

நியாயவிலைக்கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு பல்வேறு கட்டங்களாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் **918** நியாயவிலைக் கடைகளுக்கான புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 7. நியாயவிலைக்கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும் விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன.

இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்ட செலவினத்தில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டும் பொருட்டு, பொது விநியோகத் திட்ட மானியம் **2010–11** முதல் **2014–15** வரை **ரூ.762.93 கோடி** அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இயல் – V

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 1. அறிமுகம்

மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மற்றும் **29** மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் திறன் மேம்படுத்துதல் மற்றும் அறிவுத்திறன் வளர்த்தல் போன்ற செயல்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன. இந்நிறுவனங்கள் கூட்டுறவு பற்றிய செய்திகள் மற்றும் விழிப்புணர்வு பற்றிய பரப்புரை மேற்கொள்வதோடு கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களின் திறனையும் மேம்படுத்துகின்றன. பொருட்காட்சி, கருத்தரங்கு**,** பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகள் நடத்தி கூட்டுறவு சார்பான விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, இளம் வயதிலேயே கூட்டுறவு இயக்கத்தில் பங்கு பெற அரிய வாய்ப்பை ஏற்படுத்துதல் மற்றும் கூட்டுறவு வார விழாக்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து கூட்டுறவு இயக்கத்தினைப் பற்றி மக்களுக்கு எடுத்தியம்புகின்றன.

## 2. கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள்

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக தமிழ்நாட்டில் **20** கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் உள்ளன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி, கணினி பயன்பாட்டு பட்டயப் பயிற்சி ஆகிய பயிற்சிகளை அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்களில் பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பி.ஏ., பி.காம்., பி.பி.ஏ., எம்.பி.,ஏ., மற்றும் எம்.சி.ஏ., போன்ற இளங்கலை மற்றும் முதுகலைப்பட்ட படிப்புகளையும் அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் எம்.எஸ். ஆபிஸ், டேலி, சில்லரை விற்பனையாளர் பயிற்சி ஆகிய குறுகிய கால பயிற்சிகளையும் அளித்து வருகின்றன. **2015–2016** ஆம் ஆண்டில் **5,713** நபர்கள் குறுகிய காலப் பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

**2.1.** தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழு (NCCT, புதுடெல்லி) மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஆகியவை இணைந்து சென்னை மற்றும் மதுரையில் கூட்டுறவு பயிற்சி நிலையங்களை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி (HDCM) மற்றும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டபடிப்பையும் (MBA) அளித்து வருகின்றன

### 3. தொழிற்கல்வி

பர்கூர், பட்டுக்கோட்டை மற்றும் திருக்சுழி ஆகிய மூன்று கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் லால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி (COPA), தையற்கலை, நகை மதிப்பீடு, மின் பழுதுபார்த்தல், கைவினைஞர் பயிற்சி மற்றும் சமையற்கலை ஆகிய பயிற்சிகளை அளித்து வருகின்றன. கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரி இயந்திரப் பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் பட்டயப் பயிற்சிகள் மற்றும் கணினி பொறியியல் ஆகிய பட்டயப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

### 4. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி

கூட்டுறவில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், நிதிய மூலதனமாக தலா **ரூ.5 இலட்சம்** வீதம் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம் கிராம நிறுவனம் ஆகியவற்றில்

உருவாக்கியுள்ளது. இந்நிதிய மூலதனத்திலிருந்து (Corpus fund) கிடைக்கும் வட்டித் தொகை கூட்டுறவு மற்றும் தொடர்புடைய தலைப்புகள் மீது ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை **22** ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 5. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (CRDF)

கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்படும் பங்களிப்பு மூலம் உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி (CRDF) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து விடுவிக்கப்படும் அனைத்து தொகையும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதலுடன் விடுவிக்கப்படுகிறது. இந்நிதி கூட்டுறவு ஆராய்ச்சிக்கான மானியமாகவும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக வட்டியில்லாக் கடனாகவும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில், **ரூ.32.60 கோடி** மானியமாகவும், **ரூ.88.42 கோடி** வட்டியில்லா கடனாகவும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், வங்கிகளை நவீனப்படுத்துல் மற்றும் கணினி மயமாக்குதல், அலுவலகக் கட்டிடம் கட்டுதல், சிப்பமிடும் கருவிகள் வாங்குதல்,

எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகங்கள் கட்டுதல், நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் பெடல் தறிகளை வழங்குதல் ஆகிய கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### 6. கூட்டுறவுக் கல்வி நிதி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் கூட்டுறவுக் கல்வி நிதி (CEF) பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தொகை கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம் மற்றும் விளம்பரம் போன்ற நோக்கங்களுக்காக கூட்டுறவுக் கல்வி நிதிக்குழுவின் ஒப்புதலுடன் விடுவிக்கப்படுகிறது. **2011–12** முதல் **2015–16** வரையிலான ஐந்தாண்டுகளில் **ரூ.34.91 கோடி** மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதி கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகளை அளிப்பதற்கும், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம் நடத்துதல், இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்காக பயன்படுத்தப்படுகிறது. புதிதாக பொறுப்பேற்றுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் நிர்வாகக்குழு இயக்குநர்கள், தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் அனைவருக்கும் கூட்டுறவு

மேலாண்மை குறித்த பயிற்சி மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளதைச் சிறப்பாக குறிப்பிடலாம்.

## 7. இதர பயிற்சித் திட்டங்கள்

பொது விநியோகத் திட்டத்தில் பணியாற்றும் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களது திறனை மேம்படுத்தும் பொருட்டும், நுகர்வோர்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் பொருட்டும், ஊக்கப்படுத்தும் பட்டறை மற்றும் பயிற்சி வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இப்பட்டறைகளில் சிறப்பாக செயலாற்றிய விற்பனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கூட்டுறவுத் துறையின் உயர் அலுவலர்களின் திறன் மற்றும் ஊக்கத்தை மேம்படுத்தும் பொருட்டு மன அழுத்தத்தைக் கையாளுதல், நேர மேலாண்மை மற்றும் குழுக்களை உருவாக்குதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை வகுப்புகள் நடத்தப்பட்டன. அதே போன்று, புதிதாக பணியில் சேர்ந்த முதுநிலை ஆய்வாளர்கள் கூட்டுறவுத்துறையின் செயல்பாட்டினை நன்கு அறிந்து கொள்ளும் விதமாக அவர்களுக்கு அலுவலக நடைமுறை, சட்டப்பணிகள், பொது விநியோகத்திட்டம், கூட்டுறவுக்கடன் அமைப்புகள், விற்பனை மற்றும் இதர கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் தொடர்பாக இரண்டு நாள் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன.

இயல் – VI

## கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு **14** ஆண்டுகளுக்குப் பின் **2013**ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் கூட்டுறவு நிறுவனங்களில் ஜனநாயக முறைப்படியான செயல்பாட்டிற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு, **1983** ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் **33–**A என்ற புதிய பிரிவினை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க (நான்காவது திருத்தம்) சட்டம் **2012–**ன்படி சேர்த்தது. அப்புதிய பிரிவு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைத்திட வகை செய்துள்ளது. பிரிவு **33–**A யின் உப பிரிவு **(2)–**ன் கீழ் அரசினால் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் **08.02.2013** முதல் செயல்படத் துவங்கியது.

**97**வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் **2011** ல், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் ஒரு ஆதி திராவிடர் உறுப்பினரும், இரண்டு பெண் உறுப்பினர்களும் மட்டுமே இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாட்டில்

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் **18%** ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் மற்றும் **30%** பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், 2013 ஆம் ஆண்டில் உரியவாறு திருத்தப்பட்டு சமூக நீதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் **14** பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படும் **24,082** கூட்டுறவுச் சங்கங்களுக்கு **5** கட்டங்களாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த கூட்டுறவு நிறுவனங்களில் **2,37,239** நபர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் **34,527** நபர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராவர் மற்றும் **66,089** நபர்கள் பெண்கள் ஆவர்.

# இயல் – VII

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

**1.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், பங்கு மூலதனம், விளிம்புத் தொகை போன்றவற்றை வழங்கிட, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் பொதுவாக 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு அரசு, தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திலிருந்து பெரும் மறுநிதி மூலம் இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கி திட்ட செயலாக்கத்தின் முகமையாக மாவட்டங்களில் செயல்படுகிறது.

2. நிதி வழங்கும் முறை கீழ்க்கண்டவாறு:-

| வ. எண் | திட்டப்பணி | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு (%) | | | மாநில அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கடன் | மானியம் | மொத்தம் | கடன் | பங்கு மூலதனம் | மானியம் | மொத்தம் |
| 1 | கட்டுமானப்பணிகள், ஆலை & இயந்திரங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் | 100 | – | 100 | 50 | 50 | – | 100 |
| 2. | கூட்டுறவுகளுக்கு விளிம்புத் தொகை / பங்கு மூலதனம் | 100 | – | 100 | – | 100 | – | 100 |
| 3. | மனித ஆற்றல் மேம்பாடு & பயிற்சி மற்றும் ஊக்கத்தொகை | – | 50 | 50 | – | – | 100 | 100 |
| 4. | திட்ட செயலாக்க முகமை மற்றும் மாநில கண்காணிப்புக் குழுவுக்கு நிர்வாக நிதி உதவிகள் | – | 50 | 50 | – | – | 100 | 100 |

**3.** தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் **1989** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை திட்டச் செயலாக்கத்திற்காக **28** மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் **ரூ.337.90 கோடி** திட்ட மதிப்பீட்டில், **24** மாவட்டங்களில் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்சமயம் கரூர், நாகப்பட்டினம், வேலூார் மற்றும் நீலகிரி ஆகிய **4** மாவட்டங்களில் **ரூ.130.40 கோடி** திட்ட மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றத்திலுள்ளன.

# நிறைவுரை

தமிழ்நாட்டின் கூட்டுறவு இயக்கம் மிகப்பெரிய வெற்றி அடைந்துள்ளது. காலப்போக்கில் அது மக்கள் இயக்கமாக உருவெடுத்து, விவசாயிகளின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. வழக்கமாக இருந்த அதிக வட்டியில் கடன்வழங்கும் நடைமுறைக்கு மாற்றாக, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் அமைப்பாக வளர்ந்துள்ளது. சமீப காலங்களில், கூட்டுறவு அமைப்புகள் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. கூட்டுறவு அமைப்புகள் உற்பத்தியாளர்களையும், நுகர்வோர்களையும் இணைத்து, இடைத்தரகர்களே இல்லாத நிலையை உருவாக்குகின்றன. ஒட்டுமொத்த சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டுறவு அமைப்புகளின் பங்கினை எந்நாளும் குறைத்து மதிப்பிட இயலாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில், தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் அரசின் **‘தொலை நோக்கு 2023’** என்னும் குறிக்கோளினை அடைந்திட முன்னேற்றப் பாதையில் அணிவகுத்து வருகின்றன.

**செல்லூர் கே.ராஜூ**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**